# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
## பாராளுமன்றம்

---

# 1980 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, கூட்டுத்தாபனச் சட்டவறிஞர்கள் நிறுவக (திருத்த)ச் சட்டம்.

---

[1980, சனவரி மாதம் 14 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

1980, சனவரி மாதம் 18 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 20 — தபாற் செலவு : சதம் 25

**1980 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, கூட்டுத்தாபனச் சட்டவறிஞர்கள் நிறுவக (திருத்த)ச் சட்டம்**

*[1980, சனவரி மாதம் 14 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

ச. வ.—ஓ. 61/79 / 1251

**1978 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, கூட்டுத்தாபனச் சட்டவறிஞர்கள் நிறுவகச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 1980 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, கூட்டுத்தாபனச் சட்டவறிஞர்கள் நிறுவக (திருத்த)ச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

1978 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்கச் சட்டத்தின் 5ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடுசெய்யப்படும் 1978 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, கூட்டுத்தாபனச் சட்டவறிஞர்கள் நிறுவகச் சட்டத்தின் 5 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலமும், அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(1) நிறுவகத்தின் அலுவல்கள், முகாமைச் சபையொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்; அது இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பிடுசெய்யப்படும். இச்சபையானது, அமைச்சரின் விதப்புரையின் மீது அமைச்சரவையினால் நியமிக்கப்படுகின்றவர்களான பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) தவிசாளர் ; இவர் பத்தாண்டுகளுக்குக் குறையாத காலத்துக்குச் சட்டத்தொழிலில் அனுபவமுடையவராக உள்ள சட்டத்தரணியொருவராக இருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) நான்கு ஏனைய உறுப்பினர்கள் ; இவர்கள் ஏழு ஆண்டுகளுக்குக் குறையாத காலத்துக்குச் சட்டத்தொழிலில் அனுபவமுடையவர்களாக உள்ள சட்டத்தரணிமாராக இருத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :—

"சபைக் கூட்டங்களில் எவர் தலைமை தாங்குதல் வேண்டும் என்பது.

6. (1) சபையின் தவிசாளர் வருகைதந்திருப்பாரெனின், அவரே சபையின் எல்லாக் கூட்டங்களிலும் தலைமை தாங்குதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் கூட்டத்தின்போது தவிசாளர் வருகைதாராதிருப்பின், வருகைதந்திருக்கும் உறுப்பினர்கள், அத்தகைய கூட்டத்தின்போது தலைமைதாங்கவென, வருகைதந்திருக்கும் உறுப்பினர்களுள் ஒருவரைத் தெரிவு செய்தல் வேண்டும்.

(2) சபையின் ஏதேனும் கூட்டத்தின்போது முடிவு செய்யப்பட வேண்டிய பிரச்சினை எதுவும், வருகைதந்திருக்கும் உறுப்பினர்களுள் பெரும்பான்மையினரின் வாக்குக்கொண்டு முடிவுசெய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாகவிருக்கின்றவிடயத்தில் தலைமை தாங்கும் உறுப்பினர் இரண்டாவது அல்லது அறுதியிடும் வாக்கொன்றை உடையவராக இருத்தல் வேண்டும்.".

ஏ 46327—6,650 (11/79)

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 30; (வெளிநாடு) ரூபா 40; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர் வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும். பிந்திக் கிடைக்கும் சந்தாப்பணங்கள் விடயத்தில் பணம் கட்டிய தேதிக்குப் பின் வெளியிடப்படும் சட்டமூலங்களும் சட்டங்களும் மாத்திரம் அனுப்பப்படும். அதற்கு முந்தியவை அனுப்பப்படமாட்டா என்ற நிபந்தனையின் பேரில் ஏற்றுக்கொள்ளப்படும்